# திருத்தங்கல் நகராட்சி
## சாதாரண கூட்டம்

நிகழும் ஸ்ரீவிளம்பி வருடம் மார்கழி திங்கள் 15ம் நாள். **31–12–2018** ம் தேதி திங்கட்கிழமை காலை **11.00** மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.மா. சுவாமிநாதன்**

திருத்தங்கல் நகராட்சி
நாள் .26 –12–2018

தனிஅலுவலர்
திருத்தங்கல் நகராட்சி

**பொருள்–235**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பொது மக்களுக்கு டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் மற்றும் சிவகாசி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கேட்டு கொண்டதற்கிணங்க தினத்தந்தி நாளிதழில் **06/11/2018** தீபாவளி தினத்தன்று வெளியிட்டமைக்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது( எண். MDV 1819/002074/1, நாள். **06/11/2018)** மேற்படி பட்டியல் தொகை ரூ. **9388/–**மட்டும் தினத்தந்தி நாளிதழுக்கு வழங்க மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3286/2018/எச்1)

**பொருள்236**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN67 AK5848 நாய்கள் பயண வாகனத்திற்கு 23/01/2019ம் தேதியுடன் தகுதிச் சான்றிதழ் முடிவடைய உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொண்டு தகுதி சான்றிதழ் பெற ஆகும் உத்தேச செலவித் தொகை ரூ. 49000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.3505/2018/எச்1

**பொருள்–237**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN67 0829 டம்பர் பிளேசர் வாகனம் **03/01/2019**ல் தகுதி சான்றிதழ் முடிவடைய உள்ளதால், மேற்படி வாகனத்திற்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொண்டு தகுதி சான்றிதழ் பெற ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ. **98,000/–**மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3506/2018/எச்1)

**பொருள்–238**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN67AP0835 டிப்பர் லாரிக்கு **30.11.2018**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1) வெங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ் – ரூ. 63,600/–
2) நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ் சிவகாசி – ரூ. 62650/–

மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி என்ற நிறுவனம் மூலம் பணி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.2996/2018/எச்1)

**பொருள்–239**

திருத்தங்கல் நகராட்சி பாராளுமன்ற உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2014-15 முதல் 2017-18-ம் ஆண்டு வரையிலான சேமிப்பு நிதி திட்டத்தின் கீழ் இந்நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர்/ மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ந.க.சி10/2386/2018 நாள்.09.11.2018-ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டதனை தொடர்ந்து மேற்படி பணிக்கு 07.12.2018-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தபுள்ளி விபரம் (%குறைவு & % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண்.21 விஸ்வகர்மா நகர் குறுக்குத் தெருக்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 10.00 | திரு.பி.முருகன் | 5.71% கூடுதல் |
| | | | திரு.கே.கிருஷ்ணசாமி | 4.20% கூடுதல் |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட 4.20% குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு. கே.கிருஷ்ணசாமி** அவர்களின் ஒப்பந்தபுள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண் : 3013/இ1/2018)

**பொருள்–240**

திருத்தங்கல் நகராட்சி பொதுநிதித்திட்டம் 2018-19- ன் படி கீழ்கண்ட பணிகளுக்கு 12.12.2018-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தபுள்ளி விபரம் (%குறைவு & % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண் 1 முதல் 10 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 10.00 | திரு.எம்.கண்ணன் | 0.34% குறைவு |
| | | | திரு.எம்.ஐயப்பன் | 0.27% குறைவு |
| 2. | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண் 11 முதல் 21 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 10.00 | திரு.எம்.கண்ணன் | 0.29% குறைவு |
| | | | திரு.எம்.ஐயப்பன் | 0.15% குறைவு |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட வரிசை எண்.1-ல் 0.34% குறைந்த ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரிசை எண்.2-ல் 0.29% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு.எம்.கண்ணன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண் : 351/இ1/2018)

**பொருள்–241**

பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா திருத்தங்கல் நகராட்சி அண்ணாமலையார் நகரில் நடைப்பெறுவதனையொட்டி அரசின் நலத்திட்டங்கள் தொடர்பான விளம்பர அறிவிப்பு இந்நகராட்சி சார்பில் தி இந்து நாளிதழில் வெளியிட்டமைக்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் எண். 38 நாள். 23.10.2017 தொகை ரூ.21,000/- (ரூபாய் இருபத்தி ஒரு ஆயிரம் மட்டும்) மேற்காண் நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 3706/இ1/2018

**பொருள்–242**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கழிப்பறை சுத்தம் செய்ய தேவையான வாட்டர் பம்ப் (water pumb)புல் வெட்டும் இயந்திரம் சப்ளை செய்ய 19/12/2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | புல்வெட்டும் இயந்திரம் | வாட்டர் பம்ப் |
|---|---|---|---|
| 1 | S.S. இன்ஜினியர்ஸ் அத்திபட்டி | 52000/No's | 47500/No's |
| 2 | சிட்டி டிரேடர்ஸ் அருப்புகோட்டை | 48000/No's | 46500/No's |

மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த M/S சிட்டி டிரேடர்ஸ், அருப்புகோட்டை என்ற நிறுவனம் மூலம் வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3117/2018/எச்1)

**பொருள்–243**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN67 AP0829 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள 19/12/2018 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1) நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி – ரூ. 94500/–
2) வெங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ் சிவகாசி – ரூ. 95700/–

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி என்ற நிறுவனம் மூலம் பணி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1, மன்றம் அனுமதிக்கலாம்.
2, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3506/2018/எச்1)

**பொருள்–244**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN67AK5848 நாய்கள் பயண வாகனத்திற்கு 19/12.2018ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1, வெங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி – ரூ. 46400/–
2, நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி – ரூ. 45450/–

மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த M/S நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி என்ற நிறுவனம் மூலம் பணி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3505/2018/எச்1)

**பொருள்–245**

திருத்தங்கல் நகராட்சி பொதுநிதித்திட்டம் 2018-19- ன் படி கீழ்கண்ட பணிகளுக்கு 21.12.2018-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தபுள்ளி விபரம் (%குறைவு & % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி** மானூர் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில் உள்ள 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு செல்லும் குடிநீர் குழாய் மாற்றி அமைக்கும் பணி | 2.00 | திரு.பி.முருகன் | 0.34% கூடுதல் |
| | | | திரு.எம்.கண்ணன் | 0.26% குறைவு |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.26% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு.எம்.கண்ணன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண் : 3151/இ1/2018)

**பொருள்–246**

திருத்தங்கல் நகராட்சி பொதுநிதித்திட்டம் 2018-19- ன் படி கீழ்கண்ட பணிகளுக்கு 21.12.2018-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தபுள்ளி விபரம் (%குறைவு & % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி** கவிதா நகர் ஓடையை தூர்வாறும் பணி | 2.00 | திரு.பி.முருகன் | 0.27% கூடுதல் |
| | | | திரு.எம்.கண்ணன் | 0.14% குறைவு |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை 0.14% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு.எம்.கண்ணன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண் : 3162/இ1/2018)

**பொருள்–247**

திருத்தங்கல் நகராட்சி சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம் 2018-2019 கீழ்காணும் பணிக்கு விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவர்/மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ந.க.சி3/3010/2018 நாள்.18.12.2018-ன் படி நிர்வாக அனுமதி வழங்கியது பின்வருமாறு.

| **வ. எண்** | **வேலையின் விவரம்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில்** | **சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு ரூ.இலட்சத்தில்** | **நகராட்சி பொது நிதி ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|---|---|
| 1 | திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 21-ல் சுக்கிரவார்பட்டி சாலையில் உள்ள குறுக்குத் தெருவில் சிமிண்ட் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 15.00 | 10.00 | 5.00 |

மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.15.00 இலட்சம் ஆகும். மேற்படி பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு ரூ.10.00 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.5.00 இலட்சம் மட்டும் நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2376/2018/இ1

**பொருள்–248**

திருத்தங்கல் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2018-19 (Solid Waste Management Scheme ) -ன் கீழ் இந்நகர்மன்ற தீர்மான எண்.126 நாள்.31.07.2018-ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு கீழ்கண்ட பணிக்கு 14.12.2018 அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1 | **திருத்தங்கல் நகராட்சி** திருத்தங்கல் நகராட்சியில் வார்டு எண்.02 மற்றும் 03 பேட்டைத் தெரு மற்றும் வார்டு எண்.21-ல் சிவகாசி - விருதுநகர் மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் Bio-mining Revamping பணிகள் செய்தல் | 301.00 | திரு.எம்.கண்ணன் | 4.85% கூடுதல் |
| | | | திரு.பி.முருகன் | 5.63% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 4.85% கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரா திரு.எம்.கண்ணன் மதுரை அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலவக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண் : 1570/இ1/2018)

பொருள்–249

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண்.01 அண்ணா காலனியில் உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு சிவகாசி - விருதுநகர் ரோடு 19 கண் பாலம் அருகில் உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்தேக்கத் தொட்டியில் இருந்து குடிநீர் - குழாய் மூலம் பம்பிங் செய்யப்படுகிறது. இந்நிலையில் தற்சமயம் நெடுஞ்சாலை துறை மூலம் சிவகாசி - விருதுநகர் சாலை அகலப்படுத்தும் பணி நடைப்பெற உள்ளதாலும் மேற்படி குழாயில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் வீணாவதினாலும் 19 கண் பாலம் முதல் அண்ணா காலனி சந்திப்பு வரை புதிய குடிநீர் குழாய் பதித்து அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.6,00,000/- (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 3785/2018/இ1

பொருள்–250

திருத்தங்கல் நகராட்சி 2018-2019-ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் காணும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றத்தில் நிர்வாக அனுமதி பெற தனி அலுவலர்/ ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 1 முதல் 10 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் (பொருள்கள் உள்பட) பணி | 8.00 |
| 2 | வார்டு எண் 11 முதல் 21 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் (பொருள்கள் உள்பட)பணி | 8.00 |

மேற்படி பணிகளை பொதுநிதித் திட்டம் 2018-2019-ன் கீழ் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.351/2018/இ1

பொருள்–251

இந்நகராட்சி எஸ்.என். புரம் சாலையில் உள்ள மானூர் கூட்டுக் குடிநீர் திட்ட நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு நாடார் நந்தவனத் தெருவில் உள்ள 8.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் பாப்பன் குளம் கண்மாய் அருகில் உள்ள 7.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி போன்றவைகளுக்கு பம்பிங் செய்யப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இந்நிலையில் எஸ்.என் புரம் சாலையில் உள்ள மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு பம்பிங் செய்யப்படும் 160mm PVC மெயின் குழாயானது பதிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டபடியாலும் அப்பகுதி கடினப் பாறைகளாக இருப்பதாலும் அடிக்கடி உடைப்புகள் ஏற்பட்டு குழாய் பம்பிங் செய்வதில் பாதிப்புகள் ஏற்படுகின்றது. எனவே மேற்படி பழுதான 160mm PVC குழாய்களுக்கு பதிலாக 150mm G.I பைப்புகளாக மாற்றி குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2283/2018/இ1

தனி அலுவலர்
திருத்தங்கல் நகராட்சி